# திருவேற்காடு நகராட்சி
# நகர்மன்ற அவசரக் கூட்டம்

2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ம் நாள் புதன்கிழமை மாலை 05.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

நகராட்சி அலுவலகம்,<br>திருவேற்காடு<br>நாள்: 04.09.2019

தனி அலுவலர் (ம) ஆணையர்,<br>திருவேற்காடு நகராட்சி.

---

## பொருள் எண். 1

இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019—20ன் கீழ் கீழ்கண்ட சாலை பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது அதன் விவரம் பின் வருமாறு

| வ. எண் | வார்டு எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | 1,3, 5 & 6 | எஸ்(அன்)பி குடியிருப்பு பிரதான சாலை, கேலக்ஸி சாலை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல், கீசன் நகர் குறுக்கு தெரு, மெட்ரோ சிட்டி சாலை தார்தளம் அமைத்தல், பெரியார் நகர் 1வது தெரு, தேவதாஸ் தெரு, பிரதிஸ் தெரு, வி.ஜி.என் 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை, 5வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை 1வது குறுக்கு தெரு, 2வது குறுக்கு தெரு, பாஸ்கர் தெரு, 1வது தெரு, பெருமாள் தெரு, எஸ் (அன்) பி குடியிருப்பு, 2வது பிரதான சாலை, 9வது குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல் மற்றும் யாதவர் தெரு சிமெண்ட் தளம் அமைத்தல், செட்டி 3வது குறுக்கு தெரு, 4வது தெரு மற்றும் 6வது குறுக்கு தெரு பேவர் பிளாக் வசதி செய்தல் | 2.00 |
| 2. | 1,2,3,5, 9,14 &15 | சென்னை நியூ சிட்டி பகுதியில் தார்தளம் அமைத்தல், ஏ.ஆர் கிருஷ்ணமூர்த்தி சாலை, சங்கர் சீலிங் சாலை, சென்சூரியன் அவென்யூ பிரதான சாலை, அண்ணா தெரு, அக்ரஹாரம் பிரதான சாலை, அக்ரஹாரம் பெருமாள் கோயில் தெரு, காமாட்சிபுரம், கனகதுர்கா நகர், சக்திவேல் நகர் பிரதான சாலைகளுக்கு தார்தளம் புதுப்பித்தல் மற்றும் புளியம்பேடு குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.00 |
| 3. | 8,9, 11 & 12 | புளியம்பேடு பிரதான சாலை, பல்வவன் நகர் 2வது பிரதான சாலையினை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல், சூசையா நகர் பூங்கா தெரு, குறுக்கு தெருவில் தார்தளம் அமைத்தல் மற்றும் சூசையா நகர் எம்.ஜி.ஆர் சாலை, குறுக்கு தெரு, கோ—ஆப்ரேடிவ் நகர் அறிஞர் அண்ணா கிழக்கு தெரு, அறிஞர் அண்ணா மேற்கு தெரு, மகாலட்சுமி நகர் பிரதான சாலை, குறுக்கு தெரு, சிவன் கோயில் தெரு, குறுக்கு தெரு மற்றும் பாலாஜி நகர் பகுதிகளுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 2.00 |
| 4. | 3,4,6,7, 8 & 12 | பல்லவன் நகர் 1வது பிரதான சாலை, கீழ்அயனம்பாக்கம் சுடுகாடு சாலை, வெள்ளாளர் தெருவில் தார்தளம் அமைத்தல் மற்றும் ராஜீவ் நகர் 1வது பிரதான சாலை, குறுக்கு தெரு, ஐ.சி.எல் காலனி, திருமலை பாலாஜி நகர் குறுக்கு தெருக்கள், பல்லவன் நகர் 1வது பிரதான சாலை மற்றும் சொக்கலிங்கம் நகர் பகுதிகளுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| 5. | 13,15, 17 & 18 | கீரின்பார்க், அருள் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் மற்றும் தேவி கருமாரியம்மன் நகர் 2வது தெரு, 4வது தெரு, 5வது தெரு, கே.பி.எஸ் நகர் 2வது தெரு, ஐயப்பா நகர் பிரதான சாலை, 1வது, 2வது தெரு, ஈஸ்வரன் நகர் 1வது, 3வது, 5வது, 5வது குறுக்கு தெருக்கள், கீரின் பார்க், எல்.கே.பி நகர், பாலாகிருஷ்ணா நகர் மற்றும் பருத்திப்பட்டு பிரதான சாலை பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல். | 2.00 |
| 6. | 15, 17 & 18 | ஜெயம் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் மற்றும் அன்னை அபிராமி நகர் பிரதான சாலை, உதவும் கரங்கள் பிரதான சாலை, அபிராமி நகர் 3வது தெரு, சுந்தர விநாயகர் நகர், சுந்தரசோழபுரம் சிவன் கோயில் ரோடு, சக்ரேஸ்வரர் நகர், ஜெயம் நகர், காவேரி நகர் பிரதான சாலை, கிருஷ்ணா நகர் பிரதான சாலை மற்றும் அபிராமி நகர் பகுதிகளுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 2.00 |
| | | **மொத்தம்** | **12.00** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் 18.07.2019–ல் TURIP 2019–20க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் விவரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | – | ரூ | 4.00 | கோடி |
| மாநில /மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்தி கட்டணம் | – | ரூ | 4.50 | கோடி |
| நகராட்சி பங்களிப்பு | – | ரூ | 3.50 | கோடி |
| **மொத்த மதிப்பீடு தொகை** | **–** | **ரூ** | **12.00** | **கோடி** |

**அலுவலக குறிப்பு:**

அ. ஒப்புதல் வழங்கலாம்.

ஆ. மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28, அவர்களுக்கு கருத்துருவினை அனுப்பிட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.844 நாள்.04.09.2019**

**தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## <u>பொருள் எண்.2</u>

மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் ந.க.எண்.145/செமதொஅ/2019 (ம) ந.க.எண்.128/செமதொஅ/2019, நாள். .07.2018–ன் கடிதத்தின்படி மாலை மலர், மாலை தமிழகம் (ம) தமிழ் முரசு தினசரி நாளிதழில் தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடவுள்ளதாகவும் அத்தொழில் சிறப்பு மலரில் நகராட்சியின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்து விளம்பரம் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டப்பணிகள் குறித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு மேற்படி கீழ் குறிப்பிட்டுள்ள பத்திரிகை நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி பணியின் அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். மேலும், மேற்படி செலவினத்திற்கான தொகையினை பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Malai Tamizhagam, #3, 5th Street Avvai Thiru Nagar, Virugambakkam, Chennai-92 | தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடுதல். | MT/1740/19/20 21.08.2019 | 14,700/- |
| 2. | M/s.Kal Publications (P) Ltd., No.229, Kutchery Road, Mylapore, Chennai-7 | | 3300177943 14.08.2019 | 18,000/- |
| 3. | M/s.Malai Malar, Rani Buildings, 86, Periyar E.V.R High Road, Chennai - 7 | | CNI/D19081114 31.08.2019 | 29,400/- |
| | | | மொத்தம் | 62,100/- |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.845** **நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.3

இந்நகராட்சியில் இயங்கி வரும் பொலிரோ வாகன பதிவு எண். TN 20 CZ 0389 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற **M/s.India Garage.,** நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.41,365/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட வாகன பயன்பாட்டின் அவசியத்தினை கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.846** **நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.4

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் 2011ம் ஆண்டு மக்க. தொகை கணக்கெடுப்பின் 62289 ஆகும். தற்போதைய மக்கள் தொகை சுமார் 89164 ஆகும். மேலும் நகராட்சி பகுதியில் 22291 குடியிருப்புகள் உள்ளன. பொது மக்களின் நலன் கருதியும், தட்ப வெப்ப நிலை பருவ கால மாற்றத்தினாலும், நிலத்தடி நீர் வெப்பத்தின் காரணமாக குறைந்து வருகிறது. குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள கழிவுநீர் மற்றும் குடிநீர் தொட்டியில் கொசுப்புழுக்கள் உற்பத்தி ஆகும் என்பதை கருத்தில் கொண்டு குடியிருப்பு பகுதிகள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் ஆகிய பகுதிகளில் டெங்கு நோய் பரவக் காரணமாக கொசுகளைக் கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே அழிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக விடிவெள்ளி ஊரக மேலாண்மை டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டு 75 களப்பணியாளர்கள் வீடுவீடாக சென்று பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி நிறுவனத்தின்ஒப்பந்தகாலம் நகர்மன்ற தீர்மானம் எண்.788, நாள்.28.05.2019-ன்படி 31.08.2019 உடன் முடிவடைந்துவிட்டது இதனை மேற்கொண்டு நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்

ஆகியோரின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பணிகள் அவசியம் கருதியும் நோய் தடுப்பு முன்னேற்பாடு நடத்துவதற்காக 75 DBC, பணியாளர்களை கொண்டு (Source Reduction) செல்வதற்கு அனுபவம் வாய்ந்த நிறுவனங்களின் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதாலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கெனவே இந்நகராட்சியில் களப்பணி மேற்கொண்ட விடிவெள்ளி ரூரல் டெவலப்மெண்ட் டிரஸ்ட் நிறுவனம் மூலம் களப்பணி செப்டம்பர் 2019 மற்றும் அக்டோபர் 2019 ஆகிய இரண்டு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் 18.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.847 நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.726, நாள்.28.02.2019–ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து **M/s.ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட்.,** மூலம் 5 எண்ணிக்கை சப்ளை செய்ய அனுமதிக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் நீட்டிப்பு காலம் 31.08.2019 உடன் முடிவடைவதால் தொடர்ந்து பொது சுகாதாரப் பணிகள் தடையேதும் ஏற்படாமல் பணி மேற்கொள்ளவும் 01.09.2019 முதல் மேலும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட் | ரூ.2200/– |
| 2 | எஸ். பொன்ராஜ் என்டர்பிரைசஸ், எண். 06, இரண்டவது குறுக்கு தெரு மூவேந்தர் நகர், பம்மல் – 75 | ரூ.2300/– |

**அலுவலக குறிப்பு:–**

அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் ஒப்பந்த நிறுவனம் அரசு அங்கீகரிக்கப்பட்ட சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் என்பதால், மேற்படி பணிக்கு முன்வைப்பு தொகை செலுத்துவதில் விதிவிலக்கு அளிக்கப்பட்ட அரசு ஆணை இணைத்துள்ளார். மேலும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல்.

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.848 நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் கொசுக்களினால் பரவக்கூடிய டெங்கு காய்ச்சல், காலரா, டைபாய்டு, பன்றிக்காய்ச்சல் மற்றும் சிக்குன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க இந்நகராட்சி முழுவதும் உள்ள பகுதிகளில் நோய்

தடுப்பு நடவடிக்கை பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (IEC) பொது மக்களுக்கு வழங்கிட டெங்கு கொசு ஒழிப்பு வாசகங்கள் பதித்த ஸ்டிக்கர், அறிவிப்பு நோட்டிஸ்கள், வால் போஸ்டர்கள் மற்றும் மல்டி கலர் பேனர்கள் அச்சடித்து சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | அறிவிப்புகள் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஓம்சக்தி எண்ர்பிரசஸ் கதவு எண்.496, பசுபதி தெரு, நசரத்பேட்டை, சென்னை – 123. | சாதாரண பேனர் – 1<br>ஸ்டோர் பேனர் – 1<br>ஸ்டோர் சப்ளை – 1<br>GI Pipe ஸ்டார் பேனர் – 1<br>A4 Sticker – 1<br>A5 Sticker – 1<br>A4 Art Paper – 1 | ரூ.400/–<br>ரூ.1600/–<br>ரூ.2900/–<br>ரூ.4400/–<br>ரூ.16.00<br>ரூ.5.00<br>ரூ.18.50 |
| 2 | சரஸ்வதி டிஜிட்டல் பிரிண்டர்ஸ் கதவு எண்.4/419, எம்.ஜி.ஆர் தெரு, பூவிருந்தவல்லி சென்னை – 123. | 1) சாதாரண பேனர்கள் – 1<br>2)ஸ்டோர் பேனர்கள் – 1<br>3) கொம்பு ஸ்டோர் – 1<br>4) GI Pipe ஸ்டார் பேனர் – 1<br>5) A4 Sticker – 1<br>6) A5 Sticker – 1<br>7)A4 Art Paper – 1 | ரூ.430<br>ரூ.1645/–<br>ரூ.2925/–<br>ரூ.4500/–<br>ரூ.17.00<br>ரூ.6.00<br>ரூ.9.00 |

**அலுவலக குறிப்பு:–**

அ) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.849 நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட 18 வார்டுகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவுவறைகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே பராமரிக்க பள்ளிக் கல்வி ப.க.4(1)–ன் துறையின் அரசு ஆணை (நிலை) எண்.77, நாள்.13.04.2015–ன் படியும் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் படியும் நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த 13 அரசுப் பள்ளிகளில் உள்ள கழிவுறைகளை பராமரிப்பு அரசு அரசு ஆணைகளில் வெளியிட்டுள்ள விதி முறைகளின்படி பணிகள் மேற்கொள்ள ஒப்படைக்கும் காலம் 1 வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.1678/2019**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) முகவரி | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு | தொகை |
|---|---|---|---|
| 1 | K. பாக்கியநாதன்<br>எண்.156/1, டிரங்ரோடு குமனன்சாவடி, சென்னை – 56 | 1 நபருக்கு | ரூ.450/– |
| 2 | ஆரோக்கியநாதன் கண்ஸ்ட்ராக்சன், கதவு எண்.15, சேஷா நகர், பூவிருந்தவல்லி, சென்னை – 56. | 1 நபருக்கு | ரூ.443/– |
| 3 | R. கதிர்வேல்<br>கதவு எண்.6/5, விவேகானந்தா தெரு, விஜயலட்சுமிபுரம், அம்பத்தூர், சென்னை – 53. | 1 நபருக்கு | ரூ.475/– |

**அலுவலக குறிப்பு:—**

அ) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.850 நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத தன்மை கொண்டவை என தரம் பிரிக்கப்படுகிறது. மேலும் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் தன்மை கொண்டவைகளை நேரடியாக முதல் நிலை சேகரிப்பு இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரக்குடில்களில் உரம் தயாரிக்கவும். அவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகளில் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும், தொற்று நோய்கள் பரவாமல் இருக்கவும் மேலும் அக்குப்பைகளின் மீது ஈக்கள் பரவாமல் கட்டுப்படுத்தவும் “ ரெடிமிக்ஸ் ” எனும் கிருமி நாசினியை அக்குப்பைகளில் தெளிக்க தேவையான அளவில் வாங்கிட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். **ந.க.எண்.2284/2019/எச்1**

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு லிட்டர் விலை ரூ. |
|---|---|---|
| 1 | டிரினிட்டி என்டர்பிரைசஸ்<br>எண். 5–5/77, புதுரான் தோட்டம் கோரிமேடு | – |
| 2 | ஸ்ரீ பிளாஸ்டோ டெக்<br>எண். 31/1 , 6வது மெயின் ரோடு,<br>திருமுடிலாக்கம், சென்னை – 44. | ரூ.820/– |
| 3 | சிவம் டிரேடர்ஸ்<br>A. பிளாக் எண்.406, 200 அடி பிரதான சாலை,<br>முகப்பேர், சென்னை – 95. | ரூ.700/– |

**அலுவலக குறிப்பு:—**

அ) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் ஒப்பந்ததாரர் மேற்படி பணிக்கு செலுத்தப்பட வேண்டிய முன்வைப்பு தொகை செலுத்தப்படவில்லை, எனவே அவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க இயலவில்லை மற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.851 நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

2019 – 20 ஆண்டிற்கு திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பாக கையாள போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து பாதுகாப்பாக எடுத்துச்செல்ல கோணிப்பைகள் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.1680/2019**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) முகவரி | கோணிப்பைகள் விவரம் ஒன்றுக்கு | தொகை |
|---|---|---|---|
| 1 | D. ஜனகமகாராஜன்<br>(ஜெ.ஜெ. எண்டர்பிரைசஸ்)<br>எண்.23, ஆண்டவர் நகர்,<br>திருவேற்காடு, சென்னை – 77 | 50Kg Bag – 1Nos<br>Bag – 1 Nos<br>Borabag – 1 Nos<br>Jumbo Bag - 1 Nos | 7.00<br>10.00<br>16.00<br>80.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | அர்ஜுன் பிளாட்டிக் பேக்ஸ் எண்.24B, காமதேனு நகர், 6வது தெரு, திருவேற்காடு, சென்னை–77. | 50Kg Bag – 1Nos<br>Bottle Bag – 1 Nos<br>Borabag – 1 Nos | 8.00<br>14.00<br>20.00 |
| 3 | M/s. கலைப்பிளாஸ்டிக் பேக் எண்.154, பெருமாள் கோயில் தெரு, அயனம்பாக்கம், திருவேற்காடு. | – | – |

**அலுவலக குறிப்பு:–**

அ) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 3ல் காணும் ஒப்பந்தப்புள்ளியில் விலைப்புள்ளி ஏதும் குறிப்பிடப்படவில்லை மற்றும் பணிக்கான முன்வைப்பு தொகை செலுத்தப்படவில்லை ஆகவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க இயலவில்லை மற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.852 நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

திருவேற்காடு நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், பொது சுகாதார நடவடிக்கைகள் பல்வேறு எடுக்கப்பட்டு வரப்படுகிறது. இதில் முதிர் கொசுக்கள் அழிக்க புகைமருந்து தெளிப்பான் மூலம் புகைமருந்து தெளிக்கப்பட்டு வந்தது.

தற்போது மேற்படி மூன்று பெரிய புகை மருந்து தெளிப்பான் மற்றும் நான்கு சிறியவகை புகை மருந்து தெளிப்பான்களில் தற்போது ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சீர்செய்யவும் மேலும் எதிர்வரும் காலம் மழைக்காலம் தொடங்க உள்ளதாலும், நகராட்சி பகுதிகள் முழுவதும் புகைமருந்து தெளிக்க வேண்டியுள்ளது. அவசியமானது என்பதால் பழுதடைந்துள்ள புகைபோக்கி தெளிப்பான்கள் பழுது நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**ந.க.எண்.3092/2019**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | கார்த்திகா சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் T.191, கட்டபொம்மன் தெரு, பாரிநகர், அசோக் நகர், செ– 83. | ரூ.4,40,000/– |
| 2 | தயாளன் இன்ஜினியரிங் எண். 10, ஜானகிராமன் தெரு, முத்துரங்கம் பிளாக் மேற்கு சைதாபேட்டை, சென்னை. | ரூ.4,45,000/– |
| 3 | பவானியம்மன் எண்டர்பிரைசஸ் எண்.1, 3வது தெரு, அன்னை சத்தியா நகர், நெசப்பாக்கம்–78. | ரூ.4,48,000/– |

**அலுவலக குறிப்பு:–**

அ) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.853 நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது

பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **89167** குடியிருப்புகளின் எண்ணிக்கை **22291** ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு **28.82** மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் முதல்நிலையிலேயே நேரடியாக பசுமை உரக்குடிலுக்கு எடுத்து செல்லப்பட்டு மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் மக்காத குப்பைகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் உடனடியாக அப்புறப்படுத்த போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து அரியலூர், அரக்கோணம் மற்றும் ரெடிஹில்ஸ் ஆகிய பகுதியகளிலுள்ள நிறுவனங்களில் திரவ எரிப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் மேற்படி நிறுவனங்களுக்கு நகராட்சி பகுதியகளில் சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை நகராட்சியின் சொந்த செலவில் தனியார் வாடகை வாகனம் மூலம் எடுத்து செல்ல ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் (ம) முகவரி** | **வாகனம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு வாடகை** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | V. பார்த்திபன்<br>எண்.1/238, லீலாவதி நகர்,<br>சிக்கராயபுரம்,<br>சென்னை – 69. | 1. அரக்கோணம்<br>2. நாவலூர்<br>3. அரியலூர்<br>4. ரெடிஹில்ஸ்<br>(சுங்க கட்டணம் ஓட்டுநர் கூலி மற்றும் இதர செலவுகள் உள்பட) | ரூ.14800/–<br>ரூ.10000/–<br>ரூ.22700/–<br>ரூ.11900/– |
| 2 | CGS இன்ஜினியரிங் சொலிஷன், பிரைவேட் லிமிடெட்<br>எண்.15, அழப்பா நகர், 2வது குறுக்கு தெரு, ஒக்கியம், துரைப்பாக்கம்,<br>சென்னை – 97. | 1. அரக்கோணம்<br>2. நாவலூர்<br>3. அரியலூர்<br>4. ரெடிஹில்ஸ்<br>(சுங்க கட்டணம் ஓட்டுநர் கூலி மற்றும் இதர செலவுகள் உள்பட) | ரூ.14600/–<br>ரூ.11800/–<br>ரூ.22400/–<br>ரூ.9900/– |

**அலுவலக குறிப்பு:–**

அ) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.854** **நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.12

2019 – 20ம் ஆண்டிற்கு திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் அமைந்திருக்கும் சமூதாய கழிவறைகள் மற்றும் பொது கழிப்பறைகள் சுத்தம் செய்ய, நகராட்சியில் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்கள் பல்வேறு ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கு கிணங்க நகராட்சி பகுதிகளிலுள்ள பொது கழிப்பறைகள் மற்றும் சமூதாய கழிப்பறைகளை பொது மக்கள் பயன்படுத்திடவும், மேலும் இந்நகராட்சி பகுதியில் (ODF, ODF+, ODF++) திட்டத்தின்படி திறந்தவெளியில் மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழித்தல் முற்றிலுமாக ஒழிக்கும் பொருட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பறைகள் மற்றும் சமூதாய கழிப்பறைகள் சுத்தம் செய்தல் மற்றும் ஆண்டு பராமரித்தல் பணிகள் மேற்கொள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் ஒவ்வொரு கழிவறைக்கும் ஒரு நபர் வீதம் பணியமர்த்தவும் அப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி ஊதிய விகிதத்தின்படி ஊதியம் வழங்கவும் மேலும் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள்

மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனம் ரூ.20.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படும் பணிக்கு செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.855** **நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.13</u>**

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் பராரியாய் சுற்றி திரியும் தெரு நாய்கள் சுமார் 2000—க்கும் மேலாக உள்ளது. மேலும் நாய்கள் பெருக்கத்தினால் பொது மக்களுக்கு பெரிதும் அச்சுறுத்தல் மற்றும் அபாயகரமாக உள்ளது என பொது மக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளதால், மேற்படி தெரு நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்து, இனப்பெருக்கத்தை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் மற்றும் தடுப்பூசி போடவும் புளுகிராஸ் மற்றும் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரிட அரசு நிர்ணயம் செய்துள்ளபடி ஒரு நாய் ஒன்றுக்கு ரூ.445/— விதம் செலவீனம் ஆகும் என மதிப்பீடு செய்யப்பட்டு ரூ.9.50/-க்கு இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.856** **நாள்.04.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**ஒம்/-தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/

**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**